BRAMPTON **Service and Information Update**

FOR IMMEDIATE RELEASE

**புது தகவல் 3: ப்ராம்ப்ட்டன் மாநகர நிர்வாகமானது, கோவிட் – 19 (COVID-19) வைரஸ்-க்கு எதிரான கூடுதல் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது – நகரின் அரங்கம் மற்றும் இதர வசதியமைப்புக்கள் மூடப்பட்டு, நிகழ்ச்சிகள் நடப்பதும் ரத்து செய்யப்பட்டன.**

ப்ராம்ப்ட்டன், ON (March 13, 2020) – பீல் பிரதேசத்தை பாதுகாக்கும் கோவிட் -19 (COVID-19) க்கான கூடுதல் முன்னெச்சரிக்கைகளைத் தொடர்ந்து பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் இன்றைய அறிவிப்பினைத் தொடர்ந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது சேவைகள் அளிப்பது மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது; இது நமது சமுதாயத்தின் ஆரோக்கியம் மற்றும் நல் வாழ்வை காப்பதற்கே ஆகும்.

**நகர நிர்வாகத்தினால் நடத்தப்படும் நிகழ்ச்சிகள்**

மார்ச் 14 மற்றும் ஏப்ரல் 5 ஆகிய தேதிகளுக்கு இடையில் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. இந்தக் கால இடைவெளியில் நிகழவிருந்த சமுதாய நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

**பொழுதுபோக்கு நிகழ்ச்சி அமைத்தல் & மார்ச் மாத விடுமுறைக்காலம்**

மார்ச் 16 திங்கட்கிழமை முதல் மார்ச் மாத விடுமுறை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தலும் ரத்து செய்யப்பட்டன. கூடுதலாக, மார்ச் 16 முதல் ஏப்ரல் 5 வரையிலான பொழுதுபோக்கு நிகழ்ச்சி அமைத்தலும் ரத்து செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட முழு கட்டணங்களும் திருப்பி அளிக்கப்படும் மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ள: recconnects@brampton.ca .

**நகரின் வசதியமைப்புக்கள் மூடப்படுதல்**

கோவிட்-19 (COVID-19) வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதில் உதவுவதற்காக, மார்ச் 16 முதல் ஏப்ரல் 5 உள்ளிட்ட தேதிவரையில் நகரின் அரங்கம், பொழுதுபோக்கு மற்றும் சமுதாயக் கூடங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்தும் அரங்குகள், மற்றும் ப்ராம்ப்ட்டன் நூலகக் கிளைகள் உள்ளிட்ட நகரின் வசதியமைப்புகள் அனைத்தும் மூடியிருக்கும்.

**மன்றக்குழு கூட்டங்கள்**

மார்ச் 16 முதல் ஏப்ரல் 5 உள்ளிட்ட தேதிவரையில், நகர்மன்றம், மன்றத்தினர் அடங்கிய குழு மற்றும் சரிப்படுத்தல் குழு (Committee of Adjustment) ஆகியவற்றின் அனைத்து கூட்டங்களும் ரத்து செய்யப்பட்டன.

**ரோஸ் ப்ராம்ப்ட்டன்**

2020 ஆம் ஆண்டு மார்ச் 16 முதல் ஏப்ரல் 5 தேதி வரையில் ரோஸ் ப்ராம்ப்ட்டன் (The Rose Brampton) உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடத்துமிடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டன அல்லது தேதி தள்ளி வைக்கப்பட்டன. ஏப்ரல் 5, 2020 வரை கலை நிகழ்ச்சிகள் நடக்குமிடங்கள் மூடப்பட்டன.

மேலும் தகவல்களுக்கு அலுவல் நேரங்களில் (திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை) தொடர்பு கொள்ளவும்: 905 874 2800 எக்ஸ்டென்ஷன். 62803 மற்றும் 62804 அல்லது மின்னஞ்சல் boxoffice@brampton.ca.

**மிக முக்கியமான சேவைகள்**

நமது சமுதாயத்தினருக்கு ஆதரவு தரும் விதமாக தீத்தடுப்பு மற்றும் அவசரகால சேவைகள், ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து துறை, போக்குவரத்து சீரமைப்பு சேவைகள், சட்ட அமலாக்கத்துறை, சாலைப்பராமரிப்பு, பாதுகாப்பு சேவைகள், விலங்குகளுக்கான சேவைகள் மற்றும் POA நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படும்.

நமது பணியாளர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளைப் பாதுகாப்பதில் உதவுவதற்காக நகர நிர்வாகமானது பேருந்துகளின் மேற்பரப்பு மற்றும் இருக்கைகள், வசதியமைப்புக்கள், மற்றும் பேருந்து முனையங்களில் அடிக்கடி தூய்மைப்படுத்தல் மற்றும் கிருமிநாசினி தெளித்தலை மேற்கொள்கிறார்கள்

**அவசரகால இயக்க செயல்களுக்கான மையம் – ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால செவிசாய்ப்புத் திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படுகிறது**

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் ஆலோசனையை பின்பற்றுகிறது. கோவிட்-19 (COVID-19) பற்றிய அதிகாரபூர்வமான அவசர நிலை எதையும் நகர நிர்வாகம்அறிவிக்கவில்லை என்றாலும், ப்ராம்ப்ட்டன் அவசரகால மேலாண்மை அலுவலகமானது (Brampton's Emergency Management Office) ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால

செவிசாய்ப்புத்திட்டத்திற்கான "நிலை 2" ஐ செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. முன் கூட்டிய தடுப்பு மற்றும் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான, குறிப்பான ஆதாரவளங்களை அர்ப்பணிப்பு செய்யவும், அதிவிரைவான செவிசாய்ப்பு கொடுக்கவும், இந்த முடிவு ஏதுவாக்குகிறது.

**கோவிட்- 19 (COVID-19) மதிப்பீட்டு மையம் – பீல் மெமோரியல்**

வில்லியம் ஆஸ்லர் ஹெல்த் சிஸ்டம் அமைப்பானது (William Osler Health System) கோவிட் - 19 (COVID-19) மதிப்பீட்டு மையத்தினை பீல் மெமோரியல் மையத்தில் (Peel Memorial Centre) திறந்திருக்கிறார்கள்; இந்த ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்கான மையமானது கோவிட் - 19 (COVID-19) வைரஸ்-க்கான சாத்தியமான அடையாளங்களை அனுபவிக்கின்ற மக்களை நோய்கண்டறிந்து மதிப்பீடு செய்யவே ஆகும். ஆஸ்லர் மதிப்பீட்டு மையம் (Osler Assessment Centre) என்பது உடனடியாக மருத்துவம் அளிக்கும் மையம் கிடையாது. மதிப்பீடு மையத்தின் அலுவல் நேரம் பிற்பகல் 2 மணி முதல் மாலை 8 மணி வரையாகும்; வாரம் ஏழு நாட்களும் வேலை செய்யும். இந்த வசதியமைப்பானது பீல் மெமோரியல் (Peel Memorial) மையத்தில், தனிமைப்படுத்திய ஒரு பகுதியாகும் மற்றும் இதே மையத்தில், அவசரப் பராமரிப்பு மையத்திற்கு அல்லது வெளி நோயாளிகள் பிரிவுக்கு வரும் நோயாளிகளுக்கு பாதிப்பு உண்டாக்காது. நோய்ப்பராமரிப்பு பெறுவதற்கு ஆஸ்லர் (Osler) தொடர்ந்து ஒரு பாதுகாப்பான இடமாகவே இருக்கும்.

நகரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் தனி நபர்கள் பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார பழக்கங்களைக் (recommended hygiene practices)கடைப்பிடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- *சுய கண்காணிப்பு (self-monitor), செய்துகொள்ளுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால், உங்களுக்கு உடல்நலப்பராமரிப்பு அளிப்பவர் கூறும் ஆலோசனைகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.*
- *உங்கள் கைகளை சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு கழுவுங்கள் அல்லது ஆல்கஹால் அடிப்படையிலான கை சானிட்டைசரை உபயோகிங்கள்.*
- *கூடுமானவரையில், கண்கள், வாய் மற்றும் மூக்கினை கைகளால் தொடுவதைத் தவிருங்கள்.*
- *நோய் கொண்ட மக்கள் மற்றும் அவர்களின் பொருட்களைத் தொடுவதை தவிருங்கள்.*
- *நீங்கள் இருமும்போதும், தும்மும்போதும் அதை ஒரு டிஷ்ஷூ பேப்பரால் மறையுங்கள். உங்கள் கைவசம் ஒரு டிஷ்ஷூ பேப்பர் இல்லை என்றால், உங்கள் முழங்கை மடிப்பில் இருக்கும் ஆடையில் முகம் புதைத்து தும்முங்கள் அல்லது இருமுங்கள்; உங்கள் கைகளை உபயோகிக்க வேண்டாம். இருமியபின்னரோ அல்லது தும்மிய பின்னரோ உங்கள் கைகளைக் கழுவுங்கள்.*

- *ஆரோக்கியமான வாழ்க்கைப் பாவனையை கடைப்பிடியுங்கள்; இதில் ஆரோக்கியமான உணவுமுறை, உடற்பயிற்சி மற்றும் போதுமான உறக்கம் ஆகியவை உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும்.*
- *சளிக்காய்ச்சலுக்கான ஒரு தடுப்பு ஊசி மருந்து செலுத்திக்கொள்ளுங்கள். கோவிட் 19 (COVID-19 ) வைரஸ்-ஐ காட்டிலும் சளிக்காய்ச்சல் உங்களைப் பீடித்து உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து பிற கிருமிகளின் தாக்கத்திற்கு வழி வகுக்கும்.*
- *உங்களை நீங்களே தனிமைப்படுத்திக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டால், உங்களுக்கு ஆரோக்கியப் பராமரிப்பு அளிப்பவரின் ஆலோசனையை பெறவும்.*

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது கோவிட்-19 (COVID-19) வைரஸ் பற்றிய கூடுதல் கவனம் எடுத்து பீல் ப்ப்ளிக் ஹெல்த் (Peel Public Health) தரும் ஆலோசனைகளை தொடர்ந்து பின்பற்றுகிறது. மிக சமீபத்திய தகவல்கள் கிடைக்குமிடம்: [www.peelregion.ca/coronavirus](www.peelregion.ca/coronavirus).

**மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்களிடமிருந்து செய்தி**

"ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, சேவைகள் மற்றும் வசதியமைப்புக்களை மூடுகின்ற கூடுதல் நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், கோவிட்-19 (*COVID-19*) வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தலை ரத்து செய்கின்றது அல்லது தேதி தள்ளிப்போடுகின்றது. இந்த முக்கியமான நடவடிக்கைகள் ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை காத்து நிற்கும். இப்படி மூடப்படுவதால், குடியிருப்புவாசிகளுக்கு ஏற்படும் தாக்கம் பற்றி நாங்கள் அறிந்தபோதும், இந்த நிலைமையச் சமாளிக்க நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்து ஆவன செய்து வருகிறோம். சிபாரிசு செய்யப்பட்ட சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிக்கவும், ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து வாகனங்களில் பயணிப்பதைக் கைவிடுமாறும் நாங்கள் குடியிருப்பு வாசிகளுக்கு உற்சாகமூட்டுகிறோம்."

**மேலும் தகவல்களுக்கு:**

- ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் (City of Brampton) கோவிட் -19 (COVID-19)
- புது தகவல் 2: கோவிட் -19 (COVID-19) க்கு எதிராக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கூடுதல் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது
- பீல் ப்ப்ளிக் ஹெல்த் (Peel Public Health) – நாவல் கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19)
- ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் – சேவைத்தகவல் புதுப்பிப்பு 1

- ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல் வாழ்வுக்கான பீல் மெமோரியல் மையம் (Peel Memorial Centre for Integrated Health and Wellness) இல் இருக்கும் கோவிட் – 19 (COVID-19 ) மதிப்பீட்டு மையம்
- ஒன்ட்டேரியோ பிரதேசம்: சுகாதார அமைச்சகம் – நாவல் கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19)
- கனடா நாட்டு அரசாங்கம் (Government of Canada) - கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19) புது தகவல்
- Wஉலக சுகாதார நிறுவனம் (World Health Organization) – கொரோனா வைரஸ் (Novel Coronavirus)கோவிட்-19 (COVID-19) புது தகவல்

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் மாநகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca